**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**

**S.C. No.97/2024**

**PW2**

| | | |
|---|---|---|
| **Name** | : | லட்சுமணன் |
| **Father's Name** | : | தீப்பாஞ்சன் |
| **Village** | : | ரோடு கரியமங்கலம் |
| **Taluk/District** | : | செங்கம் |
| **Caste** | : | ---------- |
| **Calling** | : | |
| **Religion** | : | ---------- |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 05.03.2026.
A1 present. A2 and 3 died.

**முதல் விசாரணை**

நான் ரோடு கரியமங்கலத்தில் குடியிருந்து பெரும்பட்டம் கிராமத்தில் உள்ள அரசு மதுமான கடையில் விற்பனையாளராக வேலை செய்கிறேன். அ.சா.1 ஐ தெரியும். அவர் அந்த டாஸ்மாக் கடையில் மேற்பார்வையாளர். ஆஜர் எதிரியை தெரியும். அவரை சம்பவத்தன்று பார்த்துள்ளேன். கடந்த 25.01.2019 அன்று நான் மதுமான கடையில் விற்பனையாளராக வேலை செய்து கொண்டிருந்தேன். என்னுடன் சிவக்குமார், முருகன் ஆகியோர் இருவரும் சேல்ஸ்மேனாக வேலை செய்தார்கள். அதில் சிவக்குமார் அன்றைய தினம் லீவ் போட்டுவிட்டார். முருகன் உறவினர் ஒருவரின் இறப்பிற்கு சென்றுவிட்டார். நான் மட்டும் இரவு 7.15 மணி வரை விற்பனை செய்து வந்தேன். அதன் பிறகு சுப்ரவைசர் சண்முகம் கடைக்கு வந்தார். நாங்கள் இருவரும் சேர்ந்து இரவு 10மணி வரை வியாபாரம் செய்து வந்தோம். அதன் பின்னர் விற்பனை கணக்கு முடித்தோம். அன்றைய விற்பனை தொகையான ரூ. 2,82,600/- ஐ நான் சுப்ரவைசர் சண்முகம் இடம் ஒரு மஞ்சா பையில் போட்டு ஒப்படைத்தேன். அவர் அதை வாங்கி தன் சட்டைக்குள் போட்டிருந்த பனியனுக்குள் பாதுகாப்பாக வைத்து கொண்டார். அதன் பிறகு கடையை விட்டு வெளியே வந்தோம். சட்டரை

மூடிவிட்டு பூட்டுபோட்டோம். மறுநாள் குடியரசு தினம் என்பதால் சீல் வைத்து கொண்டிருந்தோம். அப்போது திடிரென கடையின் கிழக்கு பக்கத்தில் இருந்து பயங்கரமான சத்தம் வந்தது. நான் திரும்பி பார்த்தேன். 20 அடி தூரத்தில் ஒருவர் நின்றுகொண்டிருந்தார். 2 நபர்கள் முகத்தை முடி கிட்டே வந்தார்கள். ஆஜர் எதிரி ஒரு பிஸ்டலை வைத்துக்கொண்டிருந்தார். ஆஜர் எதிரி "சலோ சலோ" என்று சொல்லிவிட்டு நாங்கள் கடை வாசலில் நிறுத்தியிருந்த என்னுடைய இரு சக்கர வாகனத்தின் பெட்டியையும் சண்முகத்தின் இரு சக்கர வாகனத்தின் பெட்டியையும் திறக்க சொல்லி பிஸ்டலை இருவர் பக்கமாக காட்டி திறக்க சொன்னார். பெட்டியை திறந்து காட்டினேன். சுப்ரவைசர் சண்முகம் பணத்தை ஆபிசில் இருந்து அலுவலர் வந்து எடுத் து சென்றுவிட்டதாக சொல்லி தூரே நகர முயற்சி செய்தார். எதிரி கையில் வைத்திருந்த பிஸ்டலால் சண்முகத்தின் இடது காலில் சுட்டார். ஆஜர் எதிரி பின்னால் ஒருவர் இருந்தார். எதிரி பிஸ்டலை என் மீது குறி வைத்தவாறு கடையின் ஷட்டரை திறக்குமாறு பாவனை செய்தார். ஷட்டரை திறந்து நான் உள்ளே சென்றேன். எதிரியும் அவருடன் இருந்த மற்றொருவரும் உள்ளே வந்தார்கள். கல்லாபெட்டியை திறக்க பாவனை செய்தார்கள். நான் திறந்து காட்டினேன். அதில் எந்த பணமும் இல்லை என்பதால் ஆஜர் எதிரி கோவப்பட்டு பிஸ்டலை என்னிடம் காட்டியவாறு என் தலையில் பிஸ்டலால் ஓங்கி குத்தினார். தலையில் ரத்தம் வந்து வழிந்தது. வலி தாங்க முடியாமல் நான் நின்றுகொண்டிருந்தேன். எதிரியும் அவருடன் வந்தவரும் வெளியே வந்தார்கள். வெளியே வாசலில் அவர்கள் நிறுத்தி வைத்திருந்த வண்டியில் மேற்கு பக்கமாக எதிரியும் மற்றவரும் சென்றுவிட்டார்கள். சண்முகம் அங்கிருந்து ஏற்கனவே ஓடிவிட்டார். நான் பெரும்பட்டம் ஊர் பக்கமாக ஓடினேன். ஒரு வீட்டில் லைட் எரிந்து கொண்டிருந்தது. அந்த வீட்டிற்கு சென்றபோது அங்கு சண்முகம் இருந்தார். நான் பயத்தில் அழுதுகொண்டே நடந்ததை சொன்னேன். சுப்ரவைசர் அவர் மனைவிக்கு போன் செய்தார். அரை மணி நேரத்தில் அவர் மனைவி வந்து எங்களை செங்கம் மருத்துவமனைக்கு ஒரு ஆட்டோவில் அழைத்து சென்றார். அங்கு எனக்கு தலையில் 9 தையல் போட்டு மேல் சிகிச்சைக்கு திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு அனுப்பினார்கள். மறுநாள் காலை செங்கம் காவல் நிலைய எஸ் ஐ வந்து என்னை விசாரித்தார். அதன் பின்னர் ஆய்வாளர் வந்து விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** - இல்லை.

Taken down by me in Open Court read over to the witness and acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.